# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
## எம்.சி.ஓ.பி. எண். 279/2018

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பிரவின் குமார் | | |
| த/பெ. | முருகேசன் | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | சோழவரம் | வயது | 27 |
| தொழில் | ஓய்வு | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 7 வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 2 | வாகன பதிவேடு நகல் |
| ம.சா.ஆ 3 | காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ 4 | ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுப்பு அறிக்கை அசல் |
| ம.சா.ஆ 6 | மருத்துவ செலவு ரசீது அசல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ விடுப்பு அறிக்கை |
| நி.ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

விபத்து சமயத்தில் எனக்கு 27 வயது. அப்போது நான் பி.எச். கம்பெனியில் உதவியாளராக வேலை செய்தேன். மாதம் ரூ.20,000/- சம்பாதித்தேன். அதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 11.03.2018 ல் மாலை 4.00 மணிக்கு கோட்டைமேடு நியாய விலைக்கடை அருகே நான் எனது இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற போது எதிரே வந்த டாடா ஏசி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த வாகனத்தின் பதிவு எண் TN-22-BZ-9829. நான் தலைகவசம் அணிந்திருந்தேன். நான் ஐஸ்வரியா மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன். ஸ்டான்லி மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றேன். அங்கு 3 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனக்கு அறுவை சிகிச்சை எதுவும செய்யவில்லை. எம்.என். ஆர்த்தோ மருத்துவமனையில் எனது வலது கால் முட்டியில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தியுள்ளார்கள். விபத்து குறித்து எனது மாமா புகார் கொடுத்தார். 4 நாட்கள் காலத்தாமதம் உள்ளது என்றால் சரிதான். நான் வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. நான் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றதுதான் விபத்திற்கு காரணம் என்றால்

சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி